RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s22223

# தமிழகத்தில் சைவமும் வழிபாட்டு நெறியும்

ஆ. முருகானந்தம் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# Vegetarianism and cultism

A. Muruganandham [a, *]

[a] Department of Tamil, National College (Autonomous), Tiruchirapalli-620 001, Tamil Nadu, India

* Corresponding Author: arumugesh@gmail.com

Received: 29.09.2022
Revised: 09-11-2022
Accepted: 14-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

It can be seen that religious worship of lord Shiva and his way of life prevailed in many parts of the Indian subcontinent before 400 BC. In order to know the rituals performed in Shaivism one must do a research beyond its origin and antiquity. The glories of God reveals that only through love one can approach the God and receive God's grace. In this case, the devotional norms of religious leaders like Thayumanavar, Vallalar are taken in detail and explained and develops sovereign thoughts in human society. The Tamil people lived in harmony with nature and admired, protected and praised the beauty of nature. They found God in the beauty of nature. It was called 'Murugu', and this Tamil word means beauty, youth, fragrance and immortality. It is nature that combines all these four thinga and found God in it. Anciet Tamil people felt that worship is the source of all virtue and morality. "Shaivites believe that it is impossible to get divine experience through knowledge and research and it can only be achieved through devotional worship." Such Saivite worship can be divided into two types: temple worship and thoughtful worship. Temple worship has existed in Tamil Nadu since ancient times. It became the lifeblood of social and religious life. Thoughtful worship is called yogic worship. Worshiping the Lord with the inner being as a temple is the thoughtful worship. Love should rule in all spheres of life. It is only then that the sovereign will grow in virtue. This is what that is conveyed to the world by the concept of Saivism and worship.

**Keywords:** Virtue, Morality, Religious Life, Worship

## முன்னுரை

தமிழகத்தில் வேரூன்றித் தழைத்துவரும் சமயம் சைவசமயம் ஆகும். சைவசமயம் மிகவும் பழமையானது. தமிழ்மக்களின் வாழ்வியலோடு இழைத்துவிட்ட அருட்சமய நெறியாகும். சைவத்தின் தோற்ற காலத்தை அருதியிட்டுக் கூறுதல் கடினமே. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட நிலையிலும் அதன் எழுச்சி நிலையைக் காணமுடியும். இத்தகைய தொன்மைச் சிறப்பு மிகுந்த சைவமும் அந்நெறித் தொடர்புடைய சொற்களும் செய்திகளும் தமிழரின் பழம்பெரும் நூல்களில் குறிக்கப்பட்டுள்ளன. சிவநெறிச் சார்புடைய வழிபாடும்,வாழ்வியல் முறையும் கி.மு 400 - க்கு முன்பே இந்தியத் துணைக்கண்டத்தின் பல பகுதிகளில் நிலவி வந்துள்ளது என்பதை அறியலாம். இத்தகைய சைவசமயத்தில் உள்ள வழிபாட்டு நெறிகளை இவ்வுலகிற்கு எடுத்து இயம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சைவத்தின் பழமை

முன்னைப்பழமைக்குப் பழமையாகவும் பின்னைப் புதுமைக்குப் புதுமையாகவும் விளங்கும் சிறப்பினைப் பெற்றவன் சிவபெருமான் என்பதை,

"முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே

பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே" (திருவெம்பாவை - பாடல் - 9) என மாணிக்கவாசகரின் திருப்பாடலினால் உணரலாம். பழந்தமிழர் செம்பொருளான இறைவனை உணர்த்த எடுத்தாண்ட சொற்களுள் ஒன்று 'கந்தழி' இதனை தொல்காப்பியத்தின் வாயிலாக உணரமுடியும்.

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற

வடு நீங்கு சிறப்பின் முதலன மூன்றும்

கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" (Ilampuranar, 1953)

இன்றைய உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் கட்டுடையன. இறைவன் கட்டிலாதவன் என்று அறிந்த நிலையின் வெளிப்பாடே பழந்தமிழ் மக்கள் இறைவனை 'கந்தழி' என்று அழைத்தனர். மேலும் இத்தகைய தெளிவுடைய பழந்தமிழர் பதி, பசு, பாசம் முறையே இறை, உயிர், ஆன்மா என்னும் முப்பொருள் உண்மையை அறிந்திருந்தனர் என்பதற்கு இடமுண்டு. இதிலிருந்து சைவத்தின் பழமையை அறியலாம். "'கந்தழி', 'முருகு' போன்ற கடவுட்பெயர்கள் 'சிவம்' என்னும் சொல்லால் குறிக்கப்படலாயின என்பர் அறிஞர்கள்." (தமிழ்ச் சைவம் -பக் 02).

## அன்பு நெறி

சைவசமயத்தை அன்புச் சமயம் என்பர். முழுமுதற்பொருளாகிய இறைவன் அன்பிலிருந்து மாறுபட்டவன் அல்லன். இதனை, "அன்பே சிவமாயமர்ந்திருப்பாரே" (திருமந்திரம் - 270) என்ற திருமூலர் திருமொழியால் உணரலாம். இத்தகைய அன்பு நெறி எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டு ஒழுகுதலைச் சிறப்பிக்கின்றது. அதாவது, "எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவன் என்று எவ்வுயிர்க்கும் அன்பா யிரு" என்ற சைவத்தின் அடிக்கருத்து உண்மையைத் தெளிவுபடுத்துவது மிகையாகா. இதனையே பாரதியும் அன்பிற் சிறந்த தவமில்லை என்கிறார்.

தாயுமானவரும், "கொல்லா விரதம் குவலயமெல் லாம்ஓங்க

எல்லார்க்குஞ் சொல்வது என்னிச்சை பராபரமே" என்பதன் மூலம் கொல்லாமை, புலால் உண்ணாமை என்ற சைவத்தின் கொள்கையை எண்ணிப்பாடுகிறார்.

அன்பும், அறமும், பண்பும், பெருமையும், உயிரிரக்கத்தில் அடங்கும் என வள்ளலார் கூறும்போது

"எவ்வுயிரும் பொதுவெனக் கண் டிரங்கி

உபகரிக்கின் றார் யாவர் அந்தச்

செவ்வியர் தஞ் செயலனைத்துந் திருவருளின்

செயலெனவே தெரிந்தேன்" என்கிறார்.

உள்ளத்தில் இரக்கஉணர்வும் தூய்மையும் நிறைந்திருத்தல் வேண்டும் என்பதைக் காட்டவே திருநீறு பூசி உருத்திராட்சம் அணியும் வழக்கத்தை சைவர்கள் மேற்கொண்டனர். திருநீறு தூய்மையின் சின்னம். இதனை "பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்" என்பார் சேக்கிழார் பெருமான். உருத்திராட்சம் சிவபெருமானின் கண்களிலிருந்து எழுந்தது என புராணம் கூறும். கண்ணுக்கு அணிகளம் கண்ணோட்டம் என்பதனை ஒட்டி உருத்திராட்சம் இரக்கத்தின் அடையாளமாகத் திகழ்வது என்று உணரப்படும்.

உயிர்களை நடமாடும் கோயிலாகக் கருதி வழிபடும் அன்பு நெறியில் சாதிசமய பேதங்கள் யாவும் அகற்றப்படும் என்பதனை திருமந்திரம்,

"படமாடக்கோயில் பகவற்கொன்றீ யின்

நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா

நடமாடக்கோயில் நம்பர்க்கொன்றீ யின்

படமாடக்கோயில் பகவற்கங் காமே" (திருமந்திரம் பாடல் 1857) என்று கூறுவதிலிருந்து உணரலாம்.

## பொதுமை நெறி

சைவம் பொதுமை நெறியினைப் புகட்டும் சமயம். அன்பு நெறி ஏற்போர் எவரேயாயினும் அவருடைய சாதி மதப் பின்னணி ஏதுவாயினும்,

எந்த நாட்டைச் சார்ந்தவரேயாயினும் அவர் பண்பால் சைவரே எனக் கொள்வர்.

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலங்கொண்டாலும்

மன்னிய சீர் சங்கரன் றாள் மறவாமை பொருளென்றே" எனவும், (சாக்கியநாயனார்புராணம் - பாடல் -07)

"மூவேந்தர் தமிழ் வழங்கு நாட்டுக்கப்பால்

முதல்வனார் அடிசார்ந்த முறைமை யோரும்" என சேக்கிழாரின் வாய்மொழியால் உணரமுடியும் (தமிழ்ச் சைவம் - பக்கம் 05). மேலும் "சைவம் தனித்தும் எல்லாச் சமயங்களிலும் ஊடுருவிப் பாய்ந்தும் நிற்பது என்று கூறுவார் தமிழ்ப்பெரியார் திரு.வி.க அவர்கள். (சைவத்தின் சமரசம் - பக்கம் - 29 )

"தென்னாட்டுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற வாதவூரடிகளும்,

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"

"ஒன்றது பேரூர் வழியா தற்குள

என்றது போல இருமுச் சமயமும்

நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்

குன்று குரைத்தெழு நாயை யொத்தார்களே" என்று திருமூலரின் கூற்றும்,

"வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கில்

விளங்குபரம் பொருளே நின் விளையாட்டல்லால்

மாறுபடுங் கருத்தில்லை" (சர்வ சமயச்சிந்தனைகள் - பக்கம் 108) என வரும் தாயுமானவர் கொள்கையும் எண்ணி எண்ணி போற்றத்தக்கதன்றோ!

மேலும் பொதுமை நெறியின் அறத்தினைக் கண்ட வள்ளலார் சமரசசுத்த சன்மார்க்க சங்கத்தை நிறுவியதும், சைவ பெரியோர்களால் போற்றப்பட்ட சீர்மையையும் இங்கு நினைவிற் கொள்ள வேண்டுவனவே.

அடுத்து "சன்மார்க்கமும் சமதர்மமும் தொடர்புடையனவாக இருத்தலே இன்றைய உலகின் தேவை" என்கிறார் திரு வி.க (Kalyanasundarnar, 1959).

## இயற்கை நெறி

இயற்கையோடு இயைந்து வாழ்;வு நடத்திய தமிழ் மக்கள் அவ்வியற்கையில் இழைந்தோடும் அழகினை வியந்து போற்றியதோடு, பாதுகாத்தும், வாழ்த்தியும் வாழ்ந்தனர். அந்த இயற்கையி;ன் பேரழகில் இறைவனைக் கண்டனர். அதனை 'முருகு' என்றனர். இச்சொல்லுக்கு அழகு, இளமை, மணம், இறவாமை, என்றெல்லாம் பொருள் சொல்வர். இந்த நான்கினையும் தொகுத்து நடக்கும் இயற்கை நெறியிலேயே இறைவனைக் கண்டனர் தமி;ழ்மக்கள். 'முருகு' என்னும் சொல்லுக்கு 'அன்' விகுதி சேர்க்கப்பெற்று முருகன் என்னும் சொல் ஏற்படலாயிற்று. இறைவன் முருகன் என்னுஞ்சொல்லால்; குறிக்கப்படலானான். தமிழ் மக்கள் சிவனை சொக்கன் (அழகன்) என்னும் பெயரால் அழைத்து வந்த மாண்பும் இங்கு நினைக்கத்தக்க ஒன்றாகும்.

“அழகனே ஆலவாயில் அப்பனே அருள் செய்வாயே” (திருவாலவாய் பதிகம் பாடல் 605) என அப்பரும், “தக்கன் வேள்வி தகர்ந்தருள் ஆலவாய சொக்கனே யஞ்சலென்றருள் செய்யேனே” (தமிழ்ச் சைவம், பக்கம் - 06) எனப்பாடும் சம்பந்தரும் பாடும் பாடலை நினைவிற் கொள்ளத் தக்கது.

## வழிபாட்டு நெறி

மனிதனின் அச்ச உணர்ச்சியிலிருந்தும் குற்ற உணர்ச்சியிலிருந்தும் தான் இறைவழிபாடு தோன்றியது. என செக்மன்ற் பிராய்டு கருதுகிறார்” (தொல் பழம் சமயக்கூறுகள், பக்கம் -10) தொல்பழம் சமயக்கூறுகள் காலத்தில் பயிர்வளத்தையும், கருவளத்தையும் ஒருங்கே பெறுவதற்காக மந்திரங்களைப் பயன்படுத்தினர் அதன் தருக்கரீதியாக வழிபாடு தோன்றியது என்பர். சைவ வாழ்வியல், வழிபாட்;டினை மையமாகக்கொண்டதாகும். வழிபாட்டு நெறியே அனைத்து அறத்துக்கும் ஒழுக்கத்துக்கும் ஊற்றாய் அமைகின்றது. “அறிவு ஆராய்ச்சிகளால் இறையனுபவம் என்பதை பெறுதல் இயலாது அது பக்தியின் வழிபாட்டு ஒழுக்கத்தினால் மட்டுமே அடையமுடியும் என்பது சைவத்தின் தெளிந்த முடிவு” (தமிழ்ச் சைவம் - பக்கம் -75) இத்தகைய சைவ வழிபாட்டினை ஆலயவழிபாடு, நினைப்புவழிபாடு என இருவகைகளாகப் பகுத்துணரலாம்.

## ஆலயவழிபாடு

தமிழகத்தில் பழங்காலந்தொட்டே ஆலயவழிபாடு இருந்து வந்துள்ளது. சமுதாய, சமய வாழ்வின் உயிர்த்துடிப்பு நிலையாக அது விளங்கியது. ஆலயப்பணி செய்வதில் மக்கள் ஆர்வம் காட்டியதோடு பொன்னும் பொருளும் மட்டுமன்றித் தங்கள் கலை, இலக்கியப் படைப்புகளையும் கலைஞர்கள் ஆலயத்தில் படைத்து அதன் அழகையும் சிறப்பையும் கூட்டினர் என்றால் அது மிகையாகா. பல நாயன்மார்களால், ஆழ்வார்களால் பாடப்பெற்ற பல சைவ, வைணவ ஆலயங்கள் உள்ளன.

தமிழ்மக்கள் சிவபெருமான் கோயிலுக்குச் சென்று அங்குப்பூவும் நீரும் கொண்டு அவருக்கு நீராட்டு நடப்பித்தனர். ஆலயத்துக்குத் திருவலகிட்டனர். அதனை மெழுகு விளக்குகள் ஏற்றி கோவிலை வலம் வந்தனர். இறைவன் திருமுன் நின்று இசைமாரி பொழிந்தனர். இறைவனின் புகழ் பாடியதோடு மட்டும் நில்லாது, வேண்டுதல்களையும், மன்றாட்டுகளையும் செய்தனர். தங்கட்கும், தம்குடும்பங்கட்கும் ஏன் ஊரார்க்கும் தேவைப்படும் நலன்களையும், ஆசிகளையும் வழங்கியருளுமாறு வேண்டிவழிப்பட்டனர் என்பதை,

“யாஅ மிரப்பவை

பொருளும் பொன்னும் போகமுமல்ல,நின்பால்

அருளும் அன்பும் அறனும் மூன்றும்

உருளிணர்க் கடம்பினொலிதா ரோயே” (Saminathaiyar, 1980) சங்கஇலக்கியமான பரிபாடலின் அடிகள் இக்கருத்துகளுக்கு உரியனவாக அமைவதை அறியலாம்.

பழங்காலத்தொட்டே முருகவழிபாடு தமிழ்;நாட்டில் இருந்து வந்துள்ளமைக்குத் திருமுருகாற்றுப்படையில் சான்றுகள் உள்ளன. அக்காலத்தில் வழக்கிலிருந்த மரபுகள் சில இன்னும் சிவ, முருகத்தலங்களில் இருப்பதனைக் காணமுடிகின்றது. தமிழ்க்கடவுள் முருகனுக்கு பூசாரி வெறியாட்டு விழா எடுத்த செய்தி பரிபாடலில்,

"மூவிரு கயந்தலை முந்நான்கு முழவுத்தோள்

ஞாயிற்றேர் நிறத்தகை நளினத்துப் பிறவியை

காஅய கடவுள் சேஎய் செய்வேள்

சால்வ தலைவ" (Saminathaiyar, 1980) என முருகனை வழிப்பட்டான். குறிப்பாக கடுவனிளநாகனார், குன்றம்பூதனார், நல்லழிசியார், நல்லச்சுதனார், கேசவனார் போன்றோரின் பாடல்கள் வழிப்பாட்டு நெறியினை சிறப்பித்துக் காட்டுகின்றன.

"அன்னை யாகலினமர்த்தியாம் நின்னைத்

துன்னி துன்னி வழிபடுவதன் பயம்

இன்னுமின்னு வவை யாகுக

தொன்முதிர் மரபினின் புகழினும் பலவே" (Saminathaiyar, 1980) என்னும் கேசவனாரின் பாடல் படிக்கும்தோறும் இன்பம் தருவதாகும்.

திருமூலரோ ஆலயவழிபாட்டின் சிறப்பினைப் பலபட்ட நிலைகளில் விளக்கியுள்ளார். சிவாலயம் சென்று தாமரை, நீலம், கழுநீர், நெய்தல்பூகம், மாதவி, மந்தாரம், தும்பை, மகிழம், மரபுன்னை, மல்லிகை, செண்பகம், பாதிரி, செவ்வந்தி ஆகிய மலர்கள் கொண்டு வழிபடுதல் வேண்டும் என்கிறார். மேலும் சந்தனம், குங்குமம், கற்பூரம், அகில் ஆகியவற்றை நீரில் குழைத்து சிவனுக்குச் சாத்துதல் வேண்டும். அவனுக்குச் சோறும் படைத்து விளக்கேற்றிப் புகை தீபம் கொண்டு அவனைத் தொழுதல் வேண்டும் என்கிறார்.அதாவது"இலைத்தொட்டுப் பூப்பற்றித் தெந்தைக் கென்றெண்ணி மலர் தொட்டுக் கொண்டேன்" என்று கூறுவதிலிருந்து அறிய முடியும்.

சமயக்குரவர்கள் அனைவரும் இந்த ஆலயவழிபாட்டின் சிறப்பினைப் பலப்படிநிலையில் பாடியுள்ளனர்.

"சித்தத் தெளிவீர்கள் அத்தன்ஆரூரைப்

பத்தி மலர்தூவ முத்தியாகும்" (முதல்திருமுறை பாடல் 981) என்கிறார் ஆளுடையப்பிள்ளை.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா

நித்தலுருமம் பிரானுடைய கோயில்புக்குப்

புலரவதன்முன் அலகிட்டு மெழுகு மிட்டுப்

பூமாலை புனைந்அ தேந்திப் புகழ்ந்து பாடித்

தலையாரக் கும்பிட்டு" திருமுறை 6 : 31: 312) என்று தம்நெஞ்சுக்கு கூறுகின்றார் ஆளுடையஅரசர்.

"மத்த யானை ஏறி மன்னர் சூழவருவீர்காள்

செத்த போதிலாரு மில்லை சிந்தையுள் வைம்மின்கள்

வைத்த உள்ளம் மாற்றவேண்டி வம்மின் மனத்தீரே

அத்தர் கோயில் எதிர்கொள் பாடி என்பத டைவோமே" (ஏழாம் திருமுறை பாடல் -62) எனப்பரவசம் அடைகின்றார் ஆளுடையநம்பிகள்.

"பூவியல் வார்சடை எம்பிராற்குப்

பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்

மாவின் வடுவகிரன்ன (திருமுறை 8 : 9 : 2) என மக்களை கூவிஅழைக்கும் மாணிக்கவாசகரின் பாடலினாலும் ஆலயவழிபாட்டின் மேன்மையை சைவசமய நாயன்மார்களினால் அறியலாம்.

சிவபெருமானுக்கு தமிழகத்தில் நூற்றுக்கணக்கில் சிவாலயங்கள் இருந்தாலும் அவற்றுள் பஞ்சபூதத்தலங்கள் என குறிப்பிடத்தக்கவை சிறப்பிடம் பெறுகின்றன. திருவானைக்கா - அப்புலிங்கம் (நீர்), திருவண்ணாமலை- தீலிங்கம் (தீ), காளஹஸ்தி - வாயுலிங்கம் (காற்று), காஞ்சி - பருத்விலிங்கம் (மண்), சிதம்பரம் - ஆகாயலிங்கம் (விசும்பு)

## ஆலயம்சென்று வழிபடுமுறை

அடியார்கள் அதிகாலையில் துயிலெழுந்து நீராடி, நீறுபூசி தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து அமைதியான மனத்துடன் இருத்தல் வேண்டும் என வலியுறுத்துவர் சைவர்.

ஆலயத்தை அணுகியதும் கோபுரத்தை நோக்கி வழிபடுவர். அதனைததூல்லிங்கமாக கருதுவதே ஆகும். கொடிமரத்தின் அருகில் தரையில் விழுந்து வணங்குவர். பிறகு மணிவாசகரின் சிவபுராணப் பகுதிகளை ஓதிய வண்ணம் ஒருமுறை அடியார்களில் சிலர் ஆலயத்தை வலம் வருவர். பிறகு நந்தித்தேவரை வணங்கிவிட்டு கோயில் உட்புறம் செல்லுவர். பிறகு பிள்ளையார் சந்நிதிக்குச் சென்று வழிபட்டுவிட்டு மூலஸ்தானத்தில் அமர்ந்துள்ள மூர்த்தியை இருகைகூப்பி வணங்குவர். பின் அம்பாளையும் உற்சவமூர்த்தியையும் வணங்கிவிட்டு ஆலயத்தை இராண்டாம் முறையாக வலம் வருவர். அங்ஙனம் வலம் வரும் நிலையில் அறுபத்துமூவர், சேக்கிழார் ஆகியோரையும் வணங்கி வழிபடுவர்.

மூன்றாம் முறை வலம்வரும்போது தட்சிணாமூர்த்தி சந்நிதியில் நின்று திருப்பாடல் பாடி வழிபடுவர். பிறகு அங்கேயே அமர்ந்து திருவைந்தெழுத்தினை தியானம் செய்து, துர்கையை வணங்கி சண்டேஸ்வரரை அடைந்து வழிபட்டு துதிப்பாடல் பாடுவர். பிறகு உட்பிரகாரத்திலிருந்து வெளிவரும்போது கொடிமரத்தின் அருகில் மீண்டும் விழுந்து வணங்குவர். ஆலயத்தில் வணங்கிய திருமூர்த்தியை மனதில் நினைத்தவாரே ஆலயத்தினின்றும் வெளியேறி இல்லம் திரும்புதல் வேண்டும் என்று வழிபாட்டு முறையை மக்களுக்கு வகுத்துக்காட்டியவர் சைவசமயவாதிகள் என்றால் அது மிகையாகா.

ஆலயவழிபாட்டுடன் தொடர்புடையது விழாவழிபாடு. "அட்டமிமுன் சீருடை ஏழுநாள்" என அப்பர் குறிப்பிடும் நாட்களில் சிவபெருமானுக்கு வீதியில் புறப்பாடு நடந்ததாக அறிகிறோம். அதுதவிர ஆதிரைநாள், உத்திரநாள், பங்குனி உத்திரம், ஆகிய நாட்களிலும் விழா எடுக்கப்பட்டது. விழாக்காலத்தில் மக்கள் அனைவரும் பக்திபரவசத்தில் மூழ்கிவிடுவர். இதனை,அப்பர் பெருமான் "குணங்கள் பேசி கூடிப் பாடித் தொண்டர்கள்

"பிணங்கித் தம்மிற் பித்தரைப் போலபிதற்றுவார்" என்றும்,

"செந்துவர் வாயார் செல்வன் சேவடி சிந்திப்பார்" என்றும் கூறுவதிலிருந்து அறியலாம்.

## நினைப்பு வழிபாடு

நினைப்பு வழிபாடு என்பது யோக வழிபாடு என்பர். உள்ளத்தையே கோயிலாக்கிக் கொண்டு இறைவனை வழிபடுதலே நினைப்பு வழிபாடு ஆகும்.

"உடம்பெனும் மனையகத் துள்ளளே தகளியாக

மடம் பாடும் உணர்நெய்யட்டி உயிரெனும்ந் திரிமயக்கி

இடம்பபடு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்

கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே” என இவ்வழிபாட்டுக்கான முறைமையைக் கூறுகின்றார் அப்பர் பெருமான். உண்மையான நினைப்பு வழிபாட்டின் திறத்தை கூறும் திருமூலர்,

“எண்ணா யிரத்தாண்டு யோகம் இருக்கினும்

கண்ணா ரமுதினைக் கண்டறி வாரில்லை

உண்ணாடி யுள்ளே ஒளிபெற நோக்கினால்

கண்ணாடி போல கலந்து நின்றானே” (திருமந்திரம் - பாடல் - 596) என உணர்த்துகின்றார்.

நினைப்பு வழிபாட்டில் சிறந்து விளங்குவது மெய்யுணர்வு வழிபாடு என்பர். யோகவழிபாட்டு முறைமையினின்றும் ஞானவழிபாட்டு முறைமை எழுகின்றது என்பதே கருத்து. “முப்பொருள் உண்மை, மும்மலப் பிணிப்பு ஆகியவற்றை அறிந்து இறைவனை அருள்வழி நின்று அறிவுத்துணையுடன் அணையும் நெறியே மெய்யுணர்வு வழிபாட்டு முறை எனப்படும்” (தமிழ்ச் சைவம், பக்கம் 84).

“ஆறாறின்; தன்மை அறியா திருந்தேனுக்கு

ஆறாறின் தன்மை அறிவித்தான் பேர்நந்தி

ஆறாறின் தன்மை அருளால் அறிந்தபின்

ஆறாறுக் கப்புறம் ஆகி நின்றானே” (திருமந்திரம் 10 : 7 : 31 பாடல் 4)

“சீவன் எனச் சிவன் எனவேறில்லை

சீவனார் சிவனாரை யறிகிலா

சீவனார் சிவனாரை யறிந்தபின்

சீவனார் சிவனாயிட் டிருப்பரே” (திருமந்திரம் பாடல் -1993)

காமம் முதலிய அறுவகைப் பகைகளைக் களைந்து ஐம்புலன்களையும் அடக்கும் போழ்தே மெய்யுணர்வால் இறைவழிபாடு நடத்த முடியும் என்பதை சம்பந்தர் பெருமான் கூறும் நிலையில்

“அகனமர்ந்த அன்பினராய் அறுபகை செற்(று)

ஐம்புலனும் அடக்கி ஞானப்

புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்

துள்ளிருக்கும்” (முதல்திருமுறை, பாடல் -6) அறியலாம்.

இத்தகைய வழிபாட்டினை மேற்கொள்வதால் மக்களுக்கு பிறப்புக்களினின்றும் நீங்கும் பேறு கிட்டும் எனச் சமய நூல்களும் கூறுகின்றன.

## முடிவுரை

சைவ வாழ்வியலில் புறந்தூய்மை, அகந்தூய்மை இரண்டும் வலியுறுத்தப்படுகின்றன. தனிமனிதனையும், அவனுடைய சமுதாய வாழ்க்கையையும் மையமாகக் கொண்;ட வாழ்வியல் ஒழுக்கம் வகுக்கப்படுகின்றன. வாழ்க்கையில் அனைத்துத் துறைகளிலும் ஈடுபாடுகளிலும் அன்பு ஆட்சி செலுத்த வேண்டும். ஆனால் இன்றோ சைவம் என்ற சொல் மக்களிடையே உயிர்க்கொலையின் வழிப்பட்ட புலால் மறுத்தலை உணர்த்துகின்றது. இந்நிலை மாற்றம் கொண்டு அன்பினால் தான் இறைவழிபாட்டையும், இறையருளையும் பெறமுடியும் என்று அறுதியிட்டு கூறும் சைவசமய வழிபாட்டு முறைமையைப் பின்பற்றி மனித சமுதாய வாழ்வியலில் இறையாண்மைச் சிறக்க வழிவகுப்போம்.

## References

Ilampuranar, (1953) Tholkappiyam, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Kalyanasundarnar, T.V. (1959) Paramporul Allathu Valkai Vali, Saadhu Achu koodam, Chennai, India

Saminathaiyar, U.V. (1980) Paripadal Moolamum Uraiyum, U.Ve.Sa. Noolagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License